# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.114/2025** |
| Deposition of witness | : | P.W.1 |
| Name | : | செல்வராஜ் |
| Father's /Husband Name | : | நடராஜன் |
| Village | : | சித்தாடி |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 65 |
| Occupation | : | விவசாயி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 14th day of October 2025.
Accused produced from Judicial custody.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது குடவாசல் தாலுக்கா சித்தாடி செட்டித் தெருவில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு சொந்தமான விவசாய நிலங்கள் சித்தாடி அஞ்சான்குளம் என்ற பகுதியில் இருக்கிறது. விவசாய பாசனத்திற்காக நீர்மூழ்கி மோட்டார் போட்டு விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 19.09.2024 ம் தேதி காலை 08.00 மணிக்கு எனது 8 மா நிலம் உள்ள அஞ்சாகுளத்திற்கு சென்றேன். காலை 08.00 மணிக்கு மோட்டாரை நீர்பாய்ச்சுவதற்காக போட்டுவிட்டேன். பகல் 12.00 மணிக்கு மின்மோட்டாரை நிறுத்தவிட்டு வீட்டிற்கு வந்தேன். மறுபடியும் அன்றைய தினம் 03.00 மணிக்கு நீர்பாய்ச்சுவதற்காக மோட்டாரை போட எனது வயலுக்கு சென்றேன். மோட்டாரை போட்ட போது மோட்டார் ஓடவில்லை என்பது தெரிந்தது. வெளியே வந்து பார்த்த போது எனது மின்மோட்டாருக்கான ஒயர் 10 மீட்டர் அளவில் அறுக்கப்பட்டு காணாமல் போயிருந்தது. இதுசம்மந்தமாக நான் அக்கம் பக்கம் உள்ள விவசாயிகளிடம் கேட்டேன். அப்போது எனது பக்கத்து வயல்காரர் மாரிமுத்து செட்டிக்குளம் சுரேஷ் மச்சான் ஆகிய ஆஜர் எதிரி செந்தில்குமார் என்பவர் எனது மோட்டார் செட் பக்கம் வந்திருந்தார். கைலியில் எனது

மின்மோட்டாருக்கான ஒயரை அறுத்து திருடிசென்றார் என்றும் என்னிடம் கூறினார். மேலும் எனது பக்கத்து வயல்காரரான சையது பாரூக் என்பவரது வயலில் இருந்த மின்மோட்டாருக்கான ஒயர் திருட்டு போய்விட்டது என்று என்னிடம் கூறினார். இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டி குடவாசல் காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனுவில் உள்ள விபரங்கள் நான் கொடுத்ததுதான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் கொடுத்த புகாரில் குடவாசல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள். எனது மின்மோட்டாரிலிருந்து திருடப்பட்ட ஒயரை ஆஜர் எதிரி எரித்துவிட்டதாகவும் காப்பர் கம்பி மட்டுமே கிடைத்ததாகவும் அதை நீதிமன்றத்தில் ஒப்படைத்ததாகவும் கூறினார்கள். அதை நான் நீதிமன்றத்திலிருந்து பெற்றுக்கொள்ளவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் காப்பர் கம்பி தான் நான் கொடுத்த புகாரில் கைப்பற்றப்பட்டதாக போலீசார் என்னிடம் காட்டினார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-** இல்லை.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.10.14 10:21:23 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`